ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2514/ 25 - 2026 නොවැම්බර් මස 11 වැනි බදාදා - 2026.11.11

2514/25 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டம்

அறிவித்தல்

சில்லறை மற்றும் மொத்த விற்பனைத் தொழில்

சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 136) பிரிவு 28 இன் ஏற்பாடுகளுக்கிணங்க, சில்லறை மற்றும் மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச்சபையானது, மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 30 ஆல் அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இத்துடன் உள்ள அட்டவணையில் குறித்துக் கூறப்படுகின்ற அவ்வாறான சம்பளச்சபைத் தீர்மானங்களை மாற்றுவதற்கு முன்மொழிவதாக இத்தால் அறியத்தருகின்றது.

மேற்கூறப்படும் முன்மொழிவுக்கான ஆட்சேபனைகள் 30.11.2026, நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அவ்வாறான ஒவ்வொரு ஆட்சேபனையும் எழுத்தில் தரப்பட வேண்டும் என்பதுடன், அது மேற்கொள்ளப்படுவதன் பின்னணி பற்றிய கூற்றொன்றையும் கெண்பிநத்தல் வேண்டும்.

எச்.எம்.டி.என்.கே. வட்டலியத்த,
தலைவர்,
சில்லறை மற்றும் மொத்த விற்பனைத் தொழிலுக்கான
சம்பளச்சபை.

தொழில் திணைக்களம்,
"மெஹவர பியச கொழும்பு 05,
2026, ஒற்றோபர் 29.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அட்டவணை

சில்லறை மற்றும் மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச்சபையால் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் 599/12 ஆம் இலக்க, 1990 பெப்ருவரி 28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டதுடன், 2261/25 ஆம் இலக்க, 07.01.2022 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாக எடுக்க்கப்பட்ட மாற்றமானது பிரசுரிக்கப்பட்டதுடன், மேலும் பின்வருமாறு பகுதி II நிரல் II இற்குப் புதிய பகுதியை மாற்றீடு செய்வதன் மூலம் மாற்றப்படலும் வேண்டும்.

பகுதி II

ஆகக்குறைந்த மாதச் சம்பளங்கள்

நிரல் I

வேலையாட்களின் வகுப்பு

தரம் I	களஞ்சியப் பொறுப்பாளர்கள், கணக்கு வைப்பவர்கள், காசாளர்கள், முகாமையாளர்கள், சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்தாளர்கள், விநியோகிப்பவர்கள்
தரம் II	தொலைபேசி இயக்குபவர்கள், எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், பதிவேடு எழுதுநர்கள், கணக்கு எழுதுநர்கள், உதவிக் காசாளர்கள், சம்பள எழுதுநர்கள், காசு இயந்திர இயக்குபவர்கள், சிட்டை எழுதுநர்கள்.
நிரல் III	பணச் சேகரிப்பாளர்கள், விற்பனையாளர்கள், பெண் விற்பனையாளர்கள். சரிபார்ப்பவர்கள்.
தரம் IV	சாதாரண தொழிலாளர்கள், பொருட்களை விநியோகம் செய்வோர், கடையின் பல்வித வேலையாளர், பொதிசெய்வோர், தகவல் பரிமாறுவோர், கருமபீட வேலையாளர், பல்வித வேலையாளர், ஏற்றியிறக்கும் வேலையாள், பம்பி கவனிப்பாளர்கள், சைக்கிளில் பொருள் காவுவோர்.

நிரல் II

மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள அளவுகள்

வேலையாட்களின் வகுப்புகள்				
தொழிலின் வருடம்	*வகுப்பு I* *ரூ. ச.*	*வகுப்பு II* *ரூ. ச.*	*வகுப்பு III* *ரூ. ச.*	*வகுப்பு IV* *ரூ. ச.*
1ஆம் வருடம்	33305.00	32525.00	31752.00	31000.00
2ஆம் வருடம்	33580.00	32775.00	31977.00	31200.00
3ஆம் வருடம்	33855.00	33025.00	32202.00	31400.00
4ஆம் வருடம்	34130.00	33275.00	32427.00	31600.00
5ஆம் வருடம்	34405.00	33525.00	32652.00	31800.00
6ஆம் வருடம்	34680.00	33775.00	32877.00	
7ஆம் வருடம்	34955.00	34025.00	33102.00	
8ஆம் வருடம்	35230.00	34275.00	33327.00	
9ஆம் வருடம்	35505.00	34525.00	33552.00	
10ஆம் வருடம்	35780.00	34775.00	33777.00	

EOG 11 - 0084